DEPOSITION OF WITNESS

(Chapter XXII Code of Criminal Procedure)

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I COURT, NAMAKKAL.

Calendar : **CC .No. 410/2022**

Miscellaneous :

Deposition of witness for — Prosecution : **PW - 2 (LW - 2)**; Defence :

| | | |
|---|---|---|
| Name | : | சதீஸ்குமார் |
| Father's / Husband Name | : | த/பெ.பழனிசாமி. |
| Village | : | |
| Taluk | : | |
| Caste & Religion | : | |
| Calling | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 16.10.2023 **என்னால்** சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டது திரு. துரைகருணாநிதி, உதவியாளர்.

**(1 முதல் 3 எதிரிகள் ஆஜர்,)**

**(விசாரணை ஆரம்பிக்கப்பட்ட நேரம். :– மதியம் 12.50 மணி )**

**முதல் விசாரணை:–**

1) நான் தற்பொழுது செங்கோடம்பாளையம், சிலுவம்பட்டியில் குடியிருந்து கோழி பண்ணை வைத்து தொழில் செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். சாந்தி என்பவர் எனது பண்ணையில் வேலை செய்து வந்தார். பழனிசாமி அவரின் கணவர் ஆவார். இந்த வழக்கின் புகார் கொடுத்த பழனிசாமி என்பவர் எனது தந்தை ஆவார்.

2) எங்கள் பண்ணையில் சாந்தி என்பவர் வேலை செய்து வந்தார், அவர் தனக்கு சொந்த வேலை இருப்பதாக சொல்லி எங்கள் கோழி பண்ணைக்கு வேலைக்கு வராமல் நின்று விட்டார். எங்களுக்கும் சாந்திக்கும் பணம் கொடுக்கல் வாங்கல் இருந்தது. சாந்தி எங்களிடமிருந்து பணத்தை திருப்பி கேட்டார், நாங்கள் கொடுத்துவிட்டோம். அவருடைய தம்பியான சதீஸ் (எ) மோகன் குமார் என்பவர் எங்களுக்கு பணம் கொடுக்க வேண்டியிருந்தது, அதை சாந்திக்கு கொடுக்க வேண்டியிருந்த பணத்தில் கழித்து கொண்டு நாங்கள் பணத்தை அவருக்கு திருப்பி கொடுத்தோம்.

3) அதன்பின்னர் 02.04.2022 ம் தேதி மாலை 06.00 மணியளவில் நானும் எனது தந்தை பழனிசாமியும் நாமக்கல் அரசு மருத்துவமனைக்கு செல்வதற்காக எங்கள் காரில் வந்தோம். அநத் வழியாக ஊர் திருவிழா நடந்து கொண்டிருந்தது. அப்பொழுது எங்கள் காரை செல்ல விடாமல் தடுத்து சாமி வருவதாக சொல்லி எங்களை போக விடாமல் தடுத்தனர். நாங்கள் எவ்வளவு சொல்லியும் கேட்காமல் எனது அப்பாவின் சட்டையை பிடித்து கீழே தள்ளி பழனிசாமி, சதீஸ் மற்றும் அவரது மச்சினன் ஆகியோர்கள் கையால் அடித்தார்கள்.

4) நான் காரிலிருந்து இறங்கி போய் ஏன் என் அப்பாவை அடிக்கிறீர்கள் என்று கேட்டதற்கு என்னையும் மூன்று பேரும் சேர்ந்து கையால் எனது தலையில் அடித்தார்கள், பழனிசாமி என்பவர் கீழே கிடந்த கல்லை எடுத்து எனது இடது புற மண்டையில் அடித்தார். என்னை கெட்ட வார்த்தைகளால் திட்டினார்கள்.

5) அங்கிருந்தவர்கள் வந்து தடுத்து மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கும் பொழுது பழனிசாமி அங்கிருந்த கல்லை காட்டி என்னைக்கு இருந்தாலும் என்னையும் எனது அப்பாவையும் கொல்லாமல் விடமாட்டேன் என்று கொலை மிரட்டல் விடுத்தார். இதுசம்மந்தமாக என்னை போலீசார் விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை – இல்லை.**

**மறு விசாரணை – இல்லை.**

**விசாரணை முடிவுற்ற நேரம்.:- மதியம் 01.02 மணி )**

DEPOSITION OF WITNESS

(Chapter XXII Code of Criminal Procedure)

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I COURT, NAMAKKAL.

Calendar : **CC .No. 410/2022**

Miscellaneous :

Deposition of witness for — Prosecution : **PW - 3(LW -5)**; Defence :

| | | |
|---|---|---|
| Name | : | பாப்பாத்தி. |
| Father's / Husband Name | : | க/பெ. பழனிசாமி. |
| Village | : | |
| Taluk | : | |
| Caste & Religion | : | |
| Calling | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 17.10.2023 **என்னால்** சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டது திரு. துரைகருணாநிதி, உதவியாளர்.

**(1 முதல் 3 எதிரிகள் ஆஜர்,)**

**(விசாரணை ஆரம்பிக்கப்பட்ட நேரம். :- மதியம் 01.03 மணி )**

**முதல் விசாரணை:-**

1) நான் தற்பொழுது செங்கோடம்பாளையத்தில் குடியிருந்து விவசாயம் செய்து வருகிறேன். அ.சா.1 பழனிசாமி எனது கணவர். அ.சா.2 சதீஸ்குமார் எனது மகன். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். போன வருடம் 4 வது மாதம் சுமார் 05.00 மணியளவில் செங்கோடம்பாளையத்தில் இருக்கும் எனது வீட்டிலிருந்து 300 மீட்டர் தொலைவில் எனது கணவர் மற்றும் மகனின் சத்தம் கேட்டு நான் அங்கு சென்று பார்த்த பொழுது ஏன் இவ்வாறு அடிக்கிறீர்கள், கெட்ட வார்த்தைகளால் பேசுகிறீர்கள் என்று எதிரிகளை கேட்டேன்.

2) நான் கேட்டதற்கு எனது மகனையும் எனது வீட்டுக்காரரையும் கல்லால் அடித்து கொன்றுவிடுவதாக பழனிசாமி மிரட்டினார். அங்கிருந்து எனது மகனை நாமக்கல் அரசு மருத்துவமனைக்கு அழைத்து வந்துவிட்டோம். எனது கணவருக்கு முழங்காலில் காயம் ஏற்பட்டது, எனது மகனுக்கு இடது புற மண்டையில் அடிபட்டிருந்தது. இதுசம்மந்தமாக எனது கணவர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை - இல்லை.

மறு விசாரணை - இல்லை.

விசாரணை முடிவுற்ற நேரம்.:- மதியம் 01.07 மணி )